

25 காசு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# பேரூர்

ஆர். பூங்குன்றன்

அட்டைப்படம் :

பேரூர்க் கனகசபை: குதிரை வீரர்கள்,
நாயக்கர் காலம் 17-ஆம் நூற்றாண்டு

முதற் பதிப்பு 1979 - 2000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை. வெளியீடு எண். 55

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

---

வரலாற்று நூல்களை வாங்கிப் படியுங்க

திரு. மா. சந்திரமூர்த்தி. எம்.ஏ.,

# காஞ்சி வாய்ப் பேரூர்

## காஞ்சியம் பெருந்துறை

கொங்கு நாட்டை ஊட்டி வளர்க்கும் தாயாக விளங்கும் நதிகளுள் காஞ்சி மா நதியும் ஒன்று. கொங்கு நாட்டவர் பணிந்து போற்றும் வெள்ளி மலையில் உற்பத்தியாகி கதிரோன் உதிக்கும் கீழ்த்திசை நோக்கிப் பாய்ந்து வரும் நதியாகும். இந்நதிக்கரை கொங்கு நாகரிகம் செழித்து வளர சிறந்த தொட்டிலாய் அமைந்தது. இந்நதியினை நொய்யல் என்றும் பெயரிட்டு அழைப்பர். கோடை மழையாலும், கொங்க மழையாலும் வற்றாது செல்லும் ஜீவ நதியாகக் காட்சியளிக்கிறது. இந்நதியைப் பற்றிப் பரணர், 'தீம்புனலாய மாடும் காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே' என்று கூறியுள்ளார். பேரூர்ப் புராண ஆசிரியர், 'மணி வாரிப் பொன் கொழித்து மலர் கலந்தித்தேன் விராய் அணியாரத் தவழ்ந்தோடு மருநீர்க் காஞ்சி' என்றும், 'அதிர் புனல் வழக்கறாத அற்புதக் காஞ்சி' என்றும் பாடியுள்ளார். சங்கச் சான்றோர் முதல் இந்நாளைய புலவர் வரை பல கவிவாணர்களால் புகழப்பட்ட நதியாகும்.

பண்டைய பேரூர் நாட்டின் மேற்குப் பகுதியில் உற்பத்தியாகி அந்நாட்டினை வளப்படுத்திய பெருமை வாய்ந்த நதி.

**ஊரும், ஊரிருந்த நாடும்**

பண்டைய கொங்கு மண்டலம் இருபத்தி நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் ஒன்று வாயரைக்கா நாடு. இந்நாடும், பேரூர் நாடென்றும் வட பரிசார நாடென்றும் இரு உட்கிளை நாடுகளைக் கொண்டிருந்தது. பேரூர் நாடு இன்றைய கோவை வட்டத்தை உள்ளடக்கியிருந்தது. பேரூர், பேரூர் நாட்டின் தலைநகரம். பேரூர் பற்றி சோழன் பூர்வ பட்டயம் கூறும் வரலாறு இதுதான்: பேரை என்னும் இருளன் வாழ்ந்தப் பேரைப் பதியில் ஒக்கிலியர்கள் பட்டி போட்டிருந்தனர். தன் கன்றுக்குப் பால் கொடுக்க நினைத்த பசு பட்டியின் படலைத் திறந்து கொண்டுச் சென்று கன்றுக்குப் பால் கொடுத்தது. பட்டியிலிருந்த ஐம்முகப் புற்று ஒன்றின் மீது குளம்பு குத்தியதால் உள்ளிருந்த லிங்கம் அடிபட்டது. அதனால் கன்றின் காலை லிங்கம் இறுகப் பிடித்துக் கொண்டது. கன்றின் நிலையை பார்த்த தாய்ப்பசு சினந்து புற்றினைத் தன்னுடைய கொம்பினால் குத்திப் பெயர்த்தது. பசுவின் கொம்பும், கன்றின் குளம்

தாக்கியமையால் சிவலிங்கத்தின் தலை யிலிருந்து இரத்தம் ஆறுகப் பெருகியது. இது கண்ட மேய்ப்பர்கள் இருளத் தலைவ னிடம் தெரிவிக்கப் போயினர். அவன் வெள்ளிமலையிலிருந்ததறிந்து அங்குச் சென்று அறிவித்தனர். வெள்ளிமலையிலி ருந்தபோது அங்குள்ள லிங்கத்தில் ரத்தம் வடிவதைக் கண்டு ஆச்சரியமடைந்தான். மேய்ப்பர்கள் தெரிவித்த செய்தி கேட்டு அவன் பேரூர் வந்து இறைவனை வணங் கினன். கதையம்சம் மிகுந்த வரலாறு. இவ்வரலாறு கேட்ட கரிகால சோழன் பட்டீஸ்வர பெருமானுக்குச் சிறப்பு செய் தான். இது பூர்வபட்டயத்திலிருந்து கிடைக்கும் வரலாறு.

பாண்டியர் வீடு

கொங்குநாடு முழுவதும் பரவலாகவுள்ள பாண்டியர் வீடு, பேரூரிலும் காணப்படு கிறது. காஞ்சி யாற்றங்கரையின் ஓரத் தில் இவை உண்டு. இதனை வரலாற்று ஆசிரியர்கள் 'பெருங்கற்சின்னம்' என்று குறிப்பிடுவர். இரண்டாயிரம் ஆண்டு கட்குமுன் வாழ்ந்த சங்கப் புலவர்கள் இந்தப் பாண்டியர் வீடுகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் பாண்டியர் வீட்டினைக் 'கல்பதுக்கை' என்றும், 'கல்லரண்' என்றும் குறிப்பிடுவர். வட்ட

வடிவில் பெரியகற்களை நிறுத்தியிருப்பர். அவ்வட்டத்திற்குள் ஆறுபர பலகைக் கற்கள் நாற்புறமும் சுவர் போல் நிறுத்தப் பட்டிருக்கும். இதன் மீது ஒருபலகைக் கல் மூடப்பட்டிருக்கும். இதற்குள் பண்டைய மனிதர்களைப் புதைக்கப் பயன் படுத்திய முதுமக்கள் தாழி, அவர்கள் பயன்படுத்திய மட்கலயங்கள், இரும்புக் கத்தி, வேறு பல பொருட்கள் போன்றவை வைக்கப்பட்டிருக்கும். மனித எலும்பு களும் இருக்கும் மாண்டுபோன மனிதர் களின் வீடு என்ற பொருளில் 'மாண்டார் வீடு' என்பது பிற்காலத்தில் பாண்டார் வீடு என மாறி 'பாண்டியர் வீடு' என வழங்கப்பட்டது.

## திருநீற்று மேடு

பேரூருக்கு மேற்கில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் திருநீற்று மேடு என்றொரு மேடு உள்ளது. பட்டீசுரசுவாமி கோயி லுக்கு வேண்டிய திருநீறு இம்மேட்டிலி ருந்துதான் எடுக்கப்படுகின்றது. பழங் காலத்தில் வாழ்ந்த ஆடு மாடுகளை மேய்த்த மக்கள் கூட்டத்தினர் விட்டுச் சென்ற சாம்பல்மேடு பின்னாளில் 'திருநீற் றுமேடு' என பெயர் பெற்றது. பூதிமேடு என்றும், 'பூதிக்காடு' என்றும் கூறப்படும். நான்காயிரம் ஆண்டுகட்கு முன்

வாழ்ந்த தென்னிந்திய மக்கள் கால்நடை வளர்ப்பதையே தங்கள் முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் பகுதியில் கால்நடைகளின் சானத்தைக் குவித்து வைப்பது வழக்கம். மேய்ச்சல் நிலம் வேண்டி வேறிடத்திற்குப் புறப்பட்டுச் செல்லுமுன் சான மேட்டினைத் தீயிட்டுக் கொளுத்தி விடுவர். அவ்வாறு கொளுத்தப்பட்டதே சாம்பல் மேடாகிப் பின்னாளில் பூதிமேடு என்றும், 'திருநீற்று மேடு' என்றும் பெயர்பெற்றது. கொங்கு நாடு முழுவதும் பூதிமேடுகள் பல உள்ளன. பேரூர்ப் புராணத்தில் திருநீற்று மேட்டுப் படலம் என்றோர் படலம் அமைந்திருப்பது இதன் சிறப்பினை வலியுறுத்தும். இந்தச் சந்தர்ப்பத்தில் பண்டையக் கொங்கு நாட்டுக் கால்நடை வளர்ப்பினைப்பற்றிய இலக்கிய சான்றுகளை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

மூவர் முதலிகள்

1300 ஆண்டுகட்கு முன் தோன்றிய பக்தி இயக்கம் தமிழக மக்கள் வாழ்வில் பெரும் மாற்றத்தையே ஏற்படுத்தியது. தமிழகத்தின் ஒரு பகுதியாகத் திகழ்ந்த கொங்கு நாட்டிலும் பக்தி இயக்கத்தின் வீச்சு பரவாமலில்லை. நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர்

காவிரிக்கரை ஓரத்தில் அமைந்துள்ள கொங்கு நாட்டுச் சிவத்தலங்களைப் பாடிப் பரவியுள்ளார். நாவுக்கரசர் தமது கோயிற் பதிகத்திலே 'பேரூர் பிரமாபுரம் பேராவூ ரும் ஆரூரார் பேரூர் முந்தையுள்ளார்' எனப் புகழ்ந்துள்ளார். சுந்தரர் கொங்கு நாட்டிற்கு மூன்று முறை வந்துள்ளார். பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் 'தண் பணிமலர்ப் படப்பை குலவு மீ கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினார்' என்று கூறியுள்ளார். பேரூர் பட்டிப் பெருமானைத் தரிசித்தபின் சிதம்பரம் சென்று பேரூரில் தாம் கண்ட காட்சியினைக் கூறி,

பாருருவமரவல்லுமை நங்கை யவள்பங்கன்
பங்கனேற்ற
னூரூரன் றருமனார் தமர் செக்கி லிடும்போது
தடுத்தாட் கொள்வா
னூரூரன் றம்பிரானாரூரன் மீ கொங்கிலணி
காஞ்சிவாய்ப்
பேரூர் பெருமானைப் புலியூர் சிற்றம்பலத்தே
பெற்றாமன்றே

என்று பாடியுள்ளார். சுந்தரர் கொங்கு நாட்டு முதல் வருகையின்போதே பேரூர் இறைவனைத் தரிசித்துச் சென்றுள்ளார். இது பேரூர் புராணத்திலும் குறிப்பிடப்படுகிறது. மேலும் சுந்தரர் 'பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான்

பிறவா நெறியானே' என்று ஊர்த்தொகையில் குறிப்பிட்டுள்ளார்.

## நாற்று நடவு உற்சவம்

ஆனித்திருமஞ்சன விழாவின்போது நாற்று நடவு விழா நடைபெறுகிறது. இவ்விழாவில் பள்ளர்களும் பள்ளியருமே முக்கியப் பங்கேற்பர். வேளாண் தொழில் முழுமையும் இவ்விழாவின் போது செய்து காட்டப்படும். விதை விதைத்தல், ஏர் உழுதல், நாற்று நடுதல் போன்ற தொழில் நடத்திக் காட்டப்படும். இந்த விழா தமிழகத்தின் வேறு எந்தக் கோயிலிலும் நடைபெறாத ஒன்று. இந்த விழாவினைப் பற்றி பேரூர் புராணத்தில் பள்ளுப்படலம் என்றொரு படலம் அமைக்கப்பட்டுள்ளது.

## பாண்டியர் செப்பேட்டில் பேரூர்

கொங்குநாடு பல நூற்றாண்டுக் காலம் பாண்டியர்கள் ஆதிக்கத்திலிருந்தது பாண்டியர்கள் கொங்கு நாட்டில் உள்ள சில கோயில்களுக்கு நிவந்தமளித்துள்ளனர். மாறன் சடையன் என்ற பாண்டியன் கொங்கு நாட்டை வென்று பேரூர் அடைந்து அங்குத் திருமாலுக்குக் குன்று போன்ற கோயில் ஒன்றைக் கட்டினான். ஜடாவர்மனின் சென்னை அருங்காட்சியகச்

செப்பேடுகள் இச்செய்தியினைக் குறிப்பிடு கின்றன.

காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக்
குன்றமன்ன தோர் கோயிலாக்கியும்
ஆழி முன்னீர் அமுகாக
அகல்வானத் தகடுரிஞ்சும்
பாழி நீண்மதில் பரந்தோங்கும்
பகலவனும் அகலவோடும்

ஆயிரத்திரு நூறு ஆண்டுகட்குமுன் கட்டப்பட்ட இக்கோயில் இருக்குமிடம் தெரியவில்லை. இந்தக் கோயிலைப் பற்றி 1292-ம் ஹொய்சாள வீரவல்லாளன் கல்வெட்டு ஒன்று பேசுகின்றது.

இராச கேசரிப் பெருவழி

பேரூரிலிருந்து பத்துக் கிலோ மீட்டர் தொலைவில் அய்யாசாமி மலை, தர்மலிங்க மலை ஆகியவை உள்ளன. இம்மலைகளுக் கிடையில் உள்ள கணவாயில் ஆயிரத்து நூறு ஆண்டுகட்குமுன் போடப்பட்ட பெருவழி (ரோடு)யும் அது பற்றிய கல்வெட்டுக்களும் உள்ளன. இப்பெருவழி உள்ள பகுதி காற்றுடும் பாறை என்று வழங்கப்படும். இப்பெருவழி பேரூர் வழி யாகச் சென்றிருக்கவேண்டும். பேரூர் கோயம்புத்தூர், சுண்டைக்கா முத்தூர் ஆகிய ஊர்கள் இப்பெருவழியில் இருந்

ருக்கலாம். முப்பதடி அகலங்கொண்ட பண்டைய பெருவழி பெரிய பெரிய கற்கள் பதிக்கப் பெற்றிருக்கிறது. பெருவழியின் தென்புறத்தில் பலகைக் கல்லில் அமைந்துள்ள வாசகம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இராச கேசரிப் பெருவழி

திருநிழலு மன்னுயிருஞ் சிறந்தளிப்ப
ஒருநிழல் வெண்டிங்கள் போலோங்கி ஒரு
நிழல்போல
வாழியர் கோச்சோழன் வளங் காவிரி நாடன்
கோழியர் கோக்கண்டன்கோ

பெருவழிக் கல்வெட்டில் குறிக்கப்படும் சோழ மன்னன் ஆதித்த சோழன். இவன் கொங்கு நாட்டைத் தன்னடிக் கீழ்க் கொண்டு வந்தவன். இந்த வரலாறு கொங்கு தேச ராசாக்கள் கதையிலுள்ளது. இப்பெருவழியின் ஓரத்தில் பண்டைய சுமை தாங்கிக் கற்கள் சில உள்ளன. பேரூர்க் கல்வெட்டில் வீர கேரள விலாட மாணிக்க வழி, கொங்கு குலவல்லி வழி போன்ற வழிகள் குறிப்பிடப்படுகின்றன.

## ஆண்ட அரசர்கள்

பேரூர்க் கல்வெட்டுக்களில் சேர மன்னர்கள் கோக்கண்டன் ரவிகோதை, இரவி கண்டன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். கொங்குச் சோழர் வமிசத்தில் குறிக்

இப்பெறும் மன்னர்களில் கலிமூர்க்கவிக்கிரம சோழன், வீரராசேந்திரன், கரிகாலசோழன், கோனேரின்மைகொண்டான் போன்ற மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. கொங்குப் பாண்டியர்களில் வீரபாண்டியற் கல்வெட்டு இரண்டு உண்டு. ஹொய்சாளர்களில் மூன்றும் வீரவல்லாள தேவன் கல்வெட்டுக்கள் உள்ளன. தெற்கனும்பி மன்னர்களில் சங்கரையன் மகன் மாணுதயன் என்ற மந்திரி கல்வெட்டு உள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட மன்னர்கள் காலத்தில் திருவான் பட்டியுடையார்க்கு மக்கள் அளித்த நிவந்தங்கள் பற்றி பல கல்வெட்டுக்கள் பேசுகின்றன. மக்கள் மட்டுமின்றி மன்னர்களும் மகேசனுக்கு அளித்த கொடைகள் ஏராளம்.

வெற்றிக்கு நன்றி

கோனேரின்மை கொண்டான் என்ற பட்டப் பெயர் கொண்ட மன்னன் காலத்தில் நடந்த இருபோர்களில் கொண்ட வெற்றிச் செய்தி குறிப்பிடப்படுகின்றது. கரைவழி நாட்டு (இன்றைய உடுமலை வட்டம், கடற்றூரில் படை நடத்திச் சென்ற முத்தக்கன் என்பான் இறந்துவிட்டான். பிறகு படையை நடத்திச் செல்லும்படி கொழுமத்துச் சுந்தரனை அனுத்திரப்பல்

லவராயன் என்பானை அரசன் ஏவினான். அவனும் கணபதியைப் பிடித்துக்கொண்டு இராஜராஜபுரத்தில் (இன்றைய தாராபுரம்) படை நடத்திச் செல்வேன் என்று கூறி பச்சைநாயகி அம்மனிடம் அருள் வேண்டினான். அம்மன் அருளால் வெற்றி கிடைக்கும் என்று நம்பினான். முற்றுப் பெறாத இக்கல்வெட்டு எண்ணூறு ஆண்டுகட்குமுன் வெட்டப்பட்டதாகும். மற்றொரு கல்வெட்டு கோனேரின்மைகொண்டானே வெளியிட்டது. இவ்வரசன் மலைநாட்டைப் படையெடுத்து வென்று பாடிவீடு அமைத்திருந்தான் அங்கு வெற்றி கொண்ட பெருமிதத்திலே படை கொண்டு வந்து கோயம்புத்தூரைப் பிடித்தான். கோயம்புத்தூரை வெற்றி கொண்டதன் நினைவாகப் பட்டியாண்டார்க்குத் தேவதானமாக இம் மலையூரை அளிக்கிறான். கம்பீரம் வாய்ந்த நடையில் அமைந்த கல்வெட்டு இதோ!

> நாம் மலை யிராச்சியத்திலே யிருந்து நாம் நம்மிராச்சியத்திலே ஐயப்பண்ணி நாம் வந்து புகுந்து நாட்டையரைத் தெண்டன் பண்ணி கோவன் புத்தூரை எறிஞ்சுகொண்டு நாம் பேரூரிலேயிருந்து புகுந்து திருவான்பட்டியுடையாரைத் தெண்டன் பண்ணி நமக்கும் அய்யனுக்கும் நன்றாக உதகம் பண்ணிக்குடுத்த

ஜெயராவது வாயரைக்கா நாட்டுக் கீழ்மலை
யூரான விக்கிரம சோழ நல்லூர்

இன்றைய பல்லடம் வட்டமே பண்டைய வாயரைக்கா நாடு. அந்த நாட்டில் கீழ் மலையூர் என்ற ஊர் பேரூர்ப் பட்டியாண்டார்க்கு வெற்றியின் சின்னமாக கொடையளிக்கப்பட்டது.

## தம் நன்மைக்குத் தானம்

பண்டை நாளைய மன்னர்கள் தங்கள் நலம் கருதியும், உறவினர் நலம் கருதியும் கோயிலுக்குத்தானம் அளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் 'ஸ்ரீசந்தி தென்னவதரையன் சந்தி' என்று வரும் கல்வெட்டு வாசகத்தில் நிலையாகச் சந்தி விளக்கொன்று வைக்கப்பட்ட செய்தி தெரிய வருகிறது கரிகால சோழன் என்பான் தன் அரசியின் நலம் வேண்டி நிலக் கொடை அளித்துள்ளான். "நம் ஆழ்விக்கு நன்றாக நாம் கண்டத்த நாளாவது அறபிகைத் தங்களத்திருநாள் எழுந்தருளி ஆழ்வி பிறந்த திருநாள் உத்திராடத்தின் அந்நூதித்யம ப்ரஸாதித் தருளுகைக்கு விட்ட நிலம்" என்பது கல்வெட்டிலுள்ள வாசகம். கோனேரின்மை கொண்டான் என்ற பட்டப் பெயருடைய மன்னன் காலத்தில் சுந்தரபாண்டியன் திருநாள், சுந்தரபாண்டியன் சந்தி போன்றவற்றிற்கு

அளிக்கப்பட்ட தானம் பற்றி கூறப்படு கிறது.

காஞ்சிமா நதியில் அணை

கொங்குநாட்டுக் கோயில் கல்வெட்டுக் களில் பண்டை நாளில் கட்டிய அணை களைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படு கின்றன. சோழன் பூர்வபட்டயத்தில் கரிகால சோழன் முட்டங்கோடி முப்பத் திரண்டு அணைகளைக் கட்டினான் என்று கூறப்பட்டுள்ளது. பேரூர் கல்வெட்டு ஒன்றில் 'தேவிசிறை' என்ற பெயர் கொண்ட அணை கட்ட ஒப்பந்தம் செய்தது பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இவ் வணை கட்டுவதால் ஏற்கெனவே கட்டப் பட்ட கோளூர் அணைக்கு எந்தச் சேதமும் ஏற்படக்கூடாது என்று அரசன் ஆணையிட் டுள்ளான். புகலிடங்கொடுத்தசோழச்சதுர் வேதி மங்கலத்தார்க்கும், பேரூர் ஊரார்க் கும் இவ்வொப்பந்தம். மாளிகைப் பழநத்த மென்கிற நத்தத்தில் புகலிடங் கொடுத்த சோழநல்லூர் என்ற ஊரைப் புதிதாக உருவாக்கிக் கொள்ளலாம் என்றும் கூறப் பட்டுள்ளது. நானூற்றைம்பது ஆண்டு கட்கு முன் வெளியிடப்பட்ட செப்பேடு ஒன்று பேரூரில் அணை கட்டியது பற்றி குறிப்பிடுகின்றது. இப்பட்டயம் தொம்பி லிபாளையத்தில் உள்ளது.

## பாடல் கல்வெட்டு

கொங்கு நாட்டில் கிடைத்துள்ள சில பாடல் கல்வெட்டுக்களுள் பேரூர் நாட்டின் இரண்டும் அடங்கும். ஒன்று முன்பே குறிப்பிடப்பட்ட ராசகேசரிப் பெருவழிச் சாசனமாகும். மற்றொன்று பேரூரில் உள்ள கல்வெட்டு.

'தண்டீஸ்வரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்துக்
கண்டீஸ்வரன் கரும மாராய்க பண்டே
அறம் செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து'



ரோமானியக் காசுகள்

# கோயில்கள்

பட்டீஸ்வரர் கோயில், அரசம்பலவாணர் கோயில், அழகிய சிற்றம்பலம், பச்சை நாயகியம்மன் கோயில், பட்டிவிநாயகர் கோயில், வீரபத்திரர் கோயில், போன்ற கோயில்கள் பேரூரில் உள்ளன. பட்டீஸ்வரர் கோயிலில் ஐம்பதுக்கும் அதிகமான கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் எங்கும் கோயில் கட்டப்பட்ட காலத்தையறிந்துகொள்ள சான்று எவையும் கிடைக்கவில்லை. சுந்தரர் தாம் அருளிய ஊர்த்தொகையில் 'பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே' என்று கூறுவதால் சுந்தரர் காலத்தும் 'பட்டீஸ்வரர்' என்ற பெயர் வழக்கில் இருந்திருக்க வேண்டும். ஆனால் தற்போதுள்ள கோயில் கொங்கு சோழர் காலத்தில் கட்டப்பட்டதாகும். அம்மன் கோயில் நாயக்கர் காலக் கட்டட அமைப்பைக் கொண்டிருக்கிறது. முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் கட்டப்பட்ட கோயிலானாலும் எழுநூறு ஆண்டுகட்கு முந்தைய கல்வெட்டுக்களில் 'திருக்காமகோட்டத்து நாச்சியார்' என்று கூறப்படுவதால் அப்போதே இந்த அம்மன்

கோயில் இருந்துள்ளது. இந்தக் கோயில் நாயக்கர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அருணகிரியார் பாடலில் தேவி பச்சைநாயகி அம்மன் என்று குறிக்கப்படு கின்றாள். கனகசபை திருமலை நாயக்கரின் உறவினரான அழகாத்திரி நாயக்கர் கட்டிய கலைக்கோயிலாகும். இங்குள்ள பிச்சாண்டி, கரிஉரித்த பெருமான், காளி, விநாயகர், சுப்பிரமணியர் போன்ற கடவுளர் திருவுரு வங்கள் கம்பீரமாகவும் எடுப்பாகவும் வடிக் கப்பட்டுள்ளன. நடராசப் பெருமானின் காட்சி குறிப்பிடத்தக்கது. துப்பாக்கியு டன் நிற்கும் குதிரை வீரன். குதிரை வீரர் கள் ஆகிய சிற்பங்கள் மறக்கமுடியாதவை. அழகிய சிற்றம்பலம் கல்வெட்டுக்களில் இடங்கை நாயகர் கோயில் எனப்படுகிறது.

# பேரூர் நாட்டுப் பழமையான ஊர்கள்

## கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் பண்டைய நாளில் கோவன்புத்தூரான வீரகேரளநல்லூர் என்று பெயர் பெற்றிருந்தது. இவ்வூர் பேரூர் கல்வெட்டில் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றது. கோனேரின்மை கொண்டான் என்ற பட்டப்பெயர் கொண்ட மன்னன் இவ்வூர் மீது படையெடுத்து வெற்றி கொண்டதாகப் பேரூர் கல்வெட்டிலே கூறிக்கொள்கிறான். இவ்வூரில் எட்டு நூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்ட சங்கீஸ்வரர் கோயில் கோட்டைப் பகுதியில் உள்ளது. அதனைத் தற்காலத்தில் சங்கமேஸ்வரர் கோயில் என்று கூறுவர். இக்கோயிலில் பண்டைய கல்வெட்டுகள் உள்ளன.

## வெள்ளலூர்

இவ்வூர் பண்டைய நாளில் அன்னதானச் சிவபுரி என்றும், தேனூர் என்றும் அழைக்கப்பட்டது. இவ்வூரில் இரண்டா

பிரம் ஆண்டுகட்கு முன் வெளியிடப்பட்ட ரோமானியக் காசுகள் நிறைய கிடைத்துள்ளன. அகஸ்டஸ், ட்ரூஸ், ஜெர்மேனிக்கர், டைட்பிரீஸ், கேலிகுலர், க்ளாடியஸ் போன்ற ரோம அரசர்கள் காலத்தில் வெளியிடப்பட்டவை. ரோம் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மோதிரங்கள், முத்திரைகள் போன்றவையும் கிடைத்துள்ளன. இவ்வூரில் தேனீஸ்வரர் கோயில், பெருமாள் கோயில், அழகு நாச்சியம்மன் கோயில் போன்ற கோயில்கள் உள்ளன. இருபது கல்வெட்டுக்கள் உள்ளன.

## போளுவார் பட்டி

இவ்வூர பண்டைய நாளில் 'நகரமான முட்டம்' என்றும் அமரபுயங்கச்சதுர்வேதிமங்கலம் என்றும் பெயரிட்டு அழைக்கப்பட்டது. காஞ்சிமா நதிக்கரையில் நாகேஸ்வரசாமி கோயில், திருமுத்துவாளி அம்மன் கோயில், வெங்கிடேச பெருமாள் கோயில் போன்ற கோயில்கள் உள்ளன. நிறைய கல்வெட்டுக்களும் உள்ளன. எட்டு நூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்டவை. கோயிலைச் சுற்றியுள்ள கோட்டைக்காடு என்ற பகுதியில் செங்கற்கள், சுடுமண் பொம்மைகள் போன்றவை ஏராளமாகக் கிடைக்கின்றன. இவை ஆயிரத்தைந் நூறு ஆண்டுகட்கு முன் செய்யப்பட்டவை.

மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட புதிய கற்கால ஆயுதங்கள் கிடைத்துள்ளன.

### தாவளம்

பேரூர் கல்வெட்டு ஒன்றிலே 'கொற்ற மங்கலமான மஞ்சிப்புளுத் தாவளம்' என்ற ஒரு ஊர் குறிப்பிடப்படுகின்றது. பண்டை நாளில் வணிகர்கள் தங்கிச் செல்லும் தங்குமிடங்களே தாவளம் என்று அழைக்கப்பட்டன. இவை பெருவழிகள அருகில் அமைந்திருக்கும். மஞ்சிப்புளி தாவளம் எங்கிருந்தது என்று சொல்ல முடியவில்லை.

### மற்ற ஊர்கள்

குனியன் புத்தூரான அமரபுயங்கர நல்லூர், கோப்பாடியான அம்மம் சதுர் வேதி மங்கலம், புகலிடங்கொடுத்த சோழச் சதுர்வேதிமங்கலம், குறிச்சி, சுண்டைக்கா பிரமதேசம், இடிகரை, திருவாலந்துறை, கோளரி போன்ற ஊர்கள 800 ஆண்டு கட்கு முன்பே சிறப்பு பெற்றிருந்த பேரூர் நாட்டு ஊர்கள். பல ஊர்கள் இன்றும் உள்ளன. சில அழிந்துவிட்டன.

### கல்வெட்டில் கூறப்படும் மக்கள் பெயர்கள்

சோழர் காலத்தில் மக்கள் பெயர்கள் சமயம் சம்பந்தப்பட்டனவாகவே இருந் தன. அடியார்களின் பெயர்கள், இறை வனின் பெயர், இறைவியின் பெயர் போன்

றவை மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தன.
பேரூர் கல்வெட்டிலும் சமயம் சார்ந்த
பெயர்கள் மிகுதி. திருவநாந உலகுய்ய
கொண்ட சோழ விழுப்பதரையன், வீர
ராசேந்திரபட்டன், இராமன் பொன்ன
னை காடவராயன், சோழன் பிரமராயன்,
திருவிக்கிரமன் கண்ணப்பனான தென்னவ
தரையன், சோலைப் பிச்சனான அழகன்,
விழுமிபட்டியான் தனபாலன், திருவான்
பட்டி பிரமரயன் சயபுகிழவநாந அத்திப்பு
ராழ்வான், உய்யவந்தான் அருளாளன்
ஆன வில்லவன் சோழன், பிரமாதிராயன்
உத்தமநம்பி, அரசன் செம்பியன், கண்
ணன், சேகரன், சந்திரசேகரன், சாந்
தில்லை நாயகன் மூவேந்த வேளான்,
நித்தம் நின்றடுவான், ஆள்வார் ஆயன்,
அவனிசி மயிலேறும் பெருமாள், பல்லவன்
பணயகனகன் நக்கன், அதிராத ராச
பல்லவரையன், சோழசிங்கதேவன் ஆண்
டாரு மாமுனியான தில்லைநாயகபட்டன்,
சம்பந்தன் கோவனான மண்டல முதலி,
சேனாபதிகள் பெயரும் கல்வெட்டில்
கூறப்படுகின்றது. எதிரிலி சோழனங்கார
சேனாபதி சுந்தரபாண்டிய மாராயன்,
கண்டராதித்தன் பட்டியான் ராஜராஜ
பங்கள நாடுடையான் போன்ற சேனா
பதிகள் பெயர்களைக் கூறலாம். வீர சமக்

கட்டார், அம்மங்க்காரர் போன்ற பட்டைப் பிரிவுகள் கூறப்படுகின்றன.

**காசுகள்**

பேரூரில் ரோமானியக் காசுகள் கிடைத்திருப்பதாக திரு. வி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் குறிப்பிடுவார். ஆற்றங்கரையில் வீரராயக் காசு, சேரர் காசு, விஜயநகரர் காசு, நாயக்கர் காசு, சுல்தான் காசு போன்றவை நிறையக் கிடைக்கின்றன. கல்வெட்டுக்களில் ரீயக்கு, அச்சு பழஞ்சலாகை போன்ற காசுகள் குறிப்பிடப் படுகின்றன.

## இலக்கியத்தில் பேரூர்

இவ்வூரின் சிறப்பினைத் தமிழ் கூறும் நல்லுலகம் அறிய எழுதப்பட்டதே 'பேரூர் புராணம்'. காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கச்சியப்ப முனிவர் என்பவரால் எழுதப் பட்டது. அருணகிரிநாதரும் பேரூர்ப் பச்சைநாயகி அம்மையைப் போற்றிப் பாடியுள்ளார். பிற்காலத்தில் பாடப்பட்ட பிரபந்தங்கள் முப்பதுக்கும் அதிகம்.

கம்பெனியார் ஆட்சிக் காலத்தில் புக்கானன் என்பார் கொங்கு நாட்டில் பயணம் செய்து குறிப்பெழுதியுள்ளார். பேரூரைப் பற்றியும் எழுதியுள்ளார். கோயில் நிர்வாகம், பிராமணர்கள், தேவதாசிகள்

பற்றிய குறிப்புக்கள் பல அவரால் தரப்பட்டுள்ளன. பேரூர் கோயில் நிர்வாகத்தில் சுல்தான்கள் தலையிடவில்லை என்று கூறியுள்ளார்.

## செப்பேடுகள்

பேரூர் கோயில் அருச்சகரிடம் ஒரு செப்பேடு இருப்பதாக கோவை கிழார் கூறியுள்ளார். இது கோனேரின்மைகொண்டான் காலத்தது. வெள்ளலூர் தேனூருடையார் கோயிலில் காணியுடைய சிவப்பிராமணன் பரத்துவாஜ கோத்திரத்து இராசராச பட்டனுக்கு அரசன் தானம் கொடுத்த செய்தியைக் கூறுகிறது. அனுத்திர பல்லவரையன் உத்தம சோழன் காரைத் தொழுவில் உத்தமசோழர் கோட்டையைப் பிடித்த செய்தி கூறப்படுகிறது. மற்றொரு சாசனத்தில் கம்மாளர் உரிமை பெற்றது கூறப்படுகிறது

## சோழன் துறை

பேரூரில் காஞ்சி நதிக்கரையில் சோழன் துறை என்ற பெயருள்ள இடம் உள்ளது. அங்கு அரசமரமும், மரத்தடியில் பிள்ளையார், நாகர் உருவங்களும் உள்ளன. இங்கு மக்கள் புனித நீராடிச் செல்கின்றனர். கேரளத்திலிருந்து நிறைய பேர் வந்து செல்கின்றனர்.

-- ஆ. சந்திரசேகரன். எம்.ஏ.